THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

31.05.2020 ஞாயிற்றுக்கிழமை



# தொண்டமான் தீயுடன் சங்கமம்!



கொழும்பு, மே 31


இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் இன்று மாலை தீயுடன் சங்கமமானது. இறுதிக் கிரியைகள் நடைபெற்ற நோர்வூட் மைதானத்துக்கு 300 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்ததால் மைதானத்துக்கு வெளியில் இருந்தும், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடாகவும் தமது தலைவரின் இறுதிப் பயணத்தை கண்ணுற்ற இ.தொ.கா தொண்டர்களும் விழிநீர் வடித்தனர். இதனால் மலையகம் சோகமயமானது. 2

## சுமந்திரனுக்கு முண்டு கொடுத்து சிறிதரன் தேர்தல் வெடிகுண்டு!

### சாடுகிறார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, மே 31

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் விடுதலைப் போராட்டத்தை விமர்சித்துக் கருத்துக்களை வெளியிட்டபோது அமைதி காத்தமையால் அவர் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றித் தொடர்ச்சியாகப் பேசிவந்ததோடு, புலிகளின் தளபதிகளில் ஒருவரின் மைத்துனராக இருக்கும் ஒருவரே மௌனமாக இருந்துவிட்டாரே என்ற அதிருப்திகளும் மக்கள் மத்தியில் உண்டு. ஆகவே அவையனைத்தையும் திசை திருப்பவே திடீரென ராஜபக்ஷவினர் மீது சிறிதரன் சீறியிருக்கின்றார். 2



## வெட்டுக்கிளி படையெடுப்பு இலங்கையிலும் ஆரம்பம்!

### கொரோனாவைத் தொடர்ந்து மற்றுமொரு நெருக்கடி

கொழும்பு, மே 31

உலக அளவில் கொரோனா அச்சுறுத்தலைத் தொடர்ந்து வெட்டுக்கிளிகளும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இந்தியாவின் வடமாநிலத்தில் அவதானிக்கப்பட்ட வெட்டுக்கிளிகள் இலங்கையில் 2

## பொலிஸார் எனக்கூறி இளம்பெண் கடத்தல்

### மந்துவிலில் நள்ளிரவில் பரபரப்பு

கொடிகாமம், மே 31

பொலிஸார் எனத் தம்மை அடையாளப்படுத்திய குழுவினர், வீடு புகுந்து இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்று, சில மணி நேரத்தில் மீண்டும் வீட்டுக்கு அருகாமையில் 300 மீற்றர் தூரத்தில் விட்டுச் சென்றுள்ளனர். இந்தச் 2

## நடேசனின் நினைவேந்தல்: பொலிஸார் அத்துமீறல்

யாழ்ப்பாணம், மே 31

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது அத்துமீறி உள்ளே நுழைந்த பொலிஸார், நிகழ்வில் பங்குகொண்டோரின் விபரங்களைப் பதிவுசெய்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர். யாழ்ப்பாண 2

## 3 காரணிகளைக் கொண்டே தேர்தல் திகதி நிர்ணயம்!

### தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

பொதுத்தேர்தல் தொடர்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னரே பொதுத்தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கமுடியும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

## வெட்டுக்கிளிகளால் ஆபத்து

### எச்சரிக்கிறார் விவசாய திணைக்கள பணிப்பாளர்

கொழும்பு, மே 31

வட இந்தியாவுக்குப் படையெடுத்துள்ள பாலைவன வெட்டுக்கிளிகளால், இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று எச்சரித்துள்ள அதிகாரிகள், இதனைச் சமாளிப்பதற்கான திட்டத்தை வரைவதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். விவசாய திணைக்கள 2

## பாடசாலைகளை ஆரம்பிக்க அமைச்சிடம் நிதியில்லை

### கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, மே 31

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன்னர் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கான வெப்பமானி, மாணவர்கள் கை கழுவுதற்கான ஏற்பாடுகள் 2

## முல்லையில் இருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மே 31

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து இன்று பரிசோதனைக்கு உட்பட்ட டுத்தப்பட்டவர்களில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இன்று 45 2

## புதினம் தெரியுமோ?

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன், அதன் தலைவர் சம்பந்தன் இரண்டு நாட்களாக கொழும்பில் உள்ள தனது வீட்டில் கலந்துரையாடியிருந்தார். இதில் முக்கிய பேசுபொருள், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி ஒருவர் அண்மையில் பேட்டி கொடுத்தமையால் கட்சிக்கு ஏற்பட்ட சரிவு பற்றியதே. ஏற்கனவே இந்த விடயத்தில் குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு 2A

# தொண்டமான்...

மாரடைப்பால் கடந்த 26ஆம் திகதி காலமான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுல் இரண்டு நாட்களாக கொழும்பில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் அதன்பின்னர் மலையகத்துக்கு எடுத்து செல்லப்பட்டது. வேவண்டன் பங்களாவில் வைத்து இந்துமுறைப்படி சடங்குகள் முடிவடைந்த பின்னர் கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு பூதவுடல் எடுத்து செல்லப்பட்டது.
கொட்டகலை சிஎல்எப் வளாகத்தில் வைத்து சர்வமதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு இரு நாட்களாக அஞ்சலி செலுத்தினர். இவ்விரண்டு நாட்களும் நுவரெலியா மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். பொதுச் சுகாதார அதிகாரிகளும் கடமைகளில் ஈடுபட்டனர். புலனாய்வாளர்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். ஊரடங்கு உத்தரவால் பொலிஸாரின் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் திருப்பியனுப்பட்டனர். நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. தொழிற்சங்கங்களின் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. நேற்று பிற்பகல் 2 மணியளவில் கொட்டகலையில் இருந்து நோர்வூட் மைதானத்தை நோக்கி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் எடுத்துவரப்பட்டது. நோர்வூட் மைதானத்தைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தொற்றுநீக்கி தெளிக்கப்பட்டு சூழல் சுத்தப்படுத்தப்பட்டிருந்தது. சர்வமதத் தலைவர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட மேலும் சில அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பின்னர் சர்வமதத் தலைவர்களின் உரைகள் இடம்பெற்றன. சர்வமத தலைவர்களின் உரைகள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அனுதாப செய்தி மும்மொழிகளிலும் வாசிக்கப்பட்டது. ஜனாதிபதியின் அனுதாப செய்தி, மத்திய மாகாண ஆளுநரால் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமானிடம் கையளிக்கப்பட்டது.
அதன்பின்னர் அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளின் சார்பில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும், நுவரெலியா மாவட்டத்திலுள்ள எதிர்க்கட்சிகளின் சார்பில் நவீன் திஸாநாயக்கவும், பொதுஜன பெரமுன உட்பட ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சியின் சார்பில் மஹிந்தானந்த அளுத்தமவும் இரங்கல் உரை ஆற்றினர். ஆறுமுகன் தொண்டமானின் குடும்பத்தின் சார்பில் ஜீவன் தொண்டமான் நன்றியுரை ஆற்றினார். இவ்வாறு இரங்கல் உரைகள் முடிவடைந்த பின்னர் அரச மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. (ம-44)

# சுமந்திரனுக்கு முண்டு கொடுத்து...

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் கட்சியோ அமைப்போ இல்லை. இதற்கென சின்னமும் இல்லை. அவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு தடை செய்யமுடியும். நகைச்சுவை நடிகர் வடிவேல் நகைச்சுவைக்காக கிணற்றைக் காணவில்லை என்று வழக்குப்பதிவு செய்யுமாறு கூறுவார். பதிவுகளே இல்லாத கட்டமைப்பொன்றை தடைசெய்வதாக கூறுவதும் அதுபோன்று தான் உள்ளது. அடுத்ததாக, அவர் தமிழ் அரசுக் கட்சிக்கு பதிலாக, கூட்டமைப்பென கூறிவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். தமிழரசுக்கட்சியைக் கூட எந்தவொரு அடிப்படையிலும் அரசு தடைசெய்யாது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சமஷ்டிக் கட்சியாக தமிழரசுக்கட்சி இருந்தாலும், தாம் பிரிவினையைக் கோரமாட்டோம். சமஷ்டி பிரிவினை இல்லையென்று சத்தியக்கடதாசி உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டாகி விட்டது. மேலும் தற்போதைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கடந்த ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுத்ததைப் போன்று இம்முறையும் முண்டு கொடுப்பதற்கு தயாராகி விட்டது. ஆகவே தமக்கு ஆதரவாக, ஒத்துழைப்புடன் செயற்பட தயாராக உள்ள அரசியல் தரப்பை ஆட்சியாளர்கள் தடைசெய்வார்களா? ஆகவே இத்தகைய கருத்துக்கள் அனைத்துமே தேர்தல் வெடிகுண்டுகளே. எனது கடந்த கால அவதானிப்புக்களின் அனுபவத்திலிருந்து, தேர்தல் நெருங்கும் தறுவாயில், விசாரணைக்கும் அவர் அழைக்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடந்த காலத்தில் அவ்வாறான நிகழ்வுகளும் இடம்பெற்றிருக்கின்றன. ஆகவே சற்று ஆழமான கரிசனை செலுத்தினீர்கள் என்றால் அதன் பின்னணி புரியும், என்றார். (ஓ,5,20,110)

# 3 காரணிகளைக் கொண்டே...

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னரே, தேர்தலை எப்போது நடத்தி முடியும் என்பதை எவ்வித தயக்கமும் இன்றி தெளிவாக குறிப்பிடமுடியும். அதேபோல் தேர்தல் திகதியை நிர்ணயிப்பதற்கு எமக்கு மேலும் மூன்று விடயங்களும் தேவைப்படுகின்றன.
# சுகாதார தரப்பின் பரிந்துரை,
# தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு நீதியாகவும், சுதந்திரமாகவும் எவ்வித அச்சமும் இன்றி தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகளை செய்வதற்காக தேவைப்படும் கால எல்லை,
# அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பல தரப்பினருக்கும் தேர்தல் குறித்த தமது பணிகளை எவ்வித தடையுமின்றி செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.
ஆகிய மூன்று விடயங்களையும் அடிப்படையாகக்கொண்டே தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படும். அதேபோல் இதுவரையில் நாம் எந்தவொரு வேட்பாளருக்கும் விருப்பு இலக்கங்களை வழங்கவில்லை. தேர்தலை விரைவில் நடத்துமாறு அழுத்தங்கள் வரவில்லை. அவ்வாறு செய்யுமாறு கோரிக்கையே விடுக்கப்படுகின்றது. தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் எதுவும் கிடையாது- என்றார். (எ-44)

# பொலிஸார் எனக்கூறி...

சம்பவம் மந்துவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியில் நேற்று சனிக்கிழமை நள்ளிரவு நடந்துள்ளது.
பெண்ணின் தந்தை கைகள் கட்டப்பட்ட நிலையில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது
அதன் அடிப்படையில் நள்ளிரவு வீடு புகுந்து பெண்ணைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
குறித்த பெண் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார். ஏனையோரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பாக பெண்ணின் தந்தை தெரிவித்ததாவது,
10 பேர் கொண்ட கும்பல் ஒன்று வாள்கள், கத்திகள், பொல்லுகள் சகிதம் வீட்டுக்குள் புகுந்தனர். நீங்கள் யார் என்று கேட்டபோது, பதில் பேசவில்லை. நான் உடனே கைபேசி மூலம் பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்த முற்பட்ட போது, தாம் பொலிஸார் என்றும் விசாரணைக்காக வந்ததாகவும் தெரிவித்தனர். பின்னர் அத்துமீறி வீட்டுக்குள் நுழைய முற்பட்டபோது நான் அதனைத் தடுத்தேன்.
என்னைக் கட்டிப்போட்டு அடித்து விட்டு வீட்டுக்குள் நித்திரையாக இருந்த எனது மகளைக் கடத்திச் சென்றனர். தடுக்கவந்த அயலவர் இருவருக்கும் தாங்கள் பொலிஸ் மற்றும் இராணுவம் என மிரட்டி அவர்களையும் தாக்கினர் - என்றார்.
சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-159)

# வெட்டுக்கிளி

குருநாகல் மாவட்டத்திலும் கண்டறியப்பட்டுள்ளதாக விவ சாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 'குருநாகல் மாவத்தகம பகுதியில் வெட்டுக்கிளிகளின் அச்சுறுத்தலால் பயிர்கள் சேதமடைந்துள்ளன. சோளம், வாழை, கொய்யா மற்றும் மா உள்ளிட்டவை சேதமடைந்துள்ளன. கடந்த 3 தினங்களுள் அதிகளவான வெட்டுக்கிளிகள் பரவியுள்ளன' என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி வீரக்கோன் அந்தப் பகுதியைச் சென்று பார்வையிட்டுள்ளார். கிருமிநாசினியைப் பயன்படுத்தி வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஆபிரிக்கா கண்டத்தில் உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்திய பாலைவன வெட்டுக்கிளிகள் இந்தியாவின் வடமாநிலங்களில் அண்மைக் காலமாக கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு சொட்டு தானியத்தையும் விட்டு வைக்காமல் அவை அழித்துள்ளன. இவை தற்போது இலங்கையிலும் தமது கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

# நடேசனின் நினைவேந்தல்:

ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு சுடரேற்றி, மலர் அஞ்சலி செலுத்தினர்.
இந்தநேரம், ஊடக அமையத்தை சூழவுள்ள பகுதிகளில் பொலிஸார் சீருடையிலும், சிவில் உடையிலும் குவிக்கப்பட்டிருந்தனர். பொலிஸ் அதிகாரியொருவரும் சிவில் உடையில் வந்த ஒருவரும் ஊடக அமையத்துள் வந்து ஊடகவியலாளர் ஒருவரிடம் நிகழ்வு தொடர்பில் விவரங்களை பதிவுசெய்து சென்றனர். ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன் 2004ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டில் படுகொலைசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-20)

# முல்லையில்...

பரிசோதனைகள் யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.
அவர்களில் 41 பேர் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. (ம)

## புதினம் தெரியுமோ?

குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு எதிராக பெரும் அதிர்வலைகள் கட்சி பேதமின்றி எழுந்திருந்தன. ஒரு கட்டத்தில் இந்த எதிர்ப்பலை யைத் தணிக்க சம்பந்தரே, ஒரு அறிக்கை விட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி இருந்தும் அது தணியாததால்தான், அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று சம்பந்தர் தலைமையில் ஆராயப்பட்டது.

அதன்போது குறித்த உறுப்பினரிடம் இருந்து கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற பதவியை அவரா கவே விட்டு விலகினால் கட்சி பற்றிய நன்மதிப்புக் கூடும் என்ற ஆலோசனை பொதுவாக முன்வைக்கப்பட்டது, மௌனம் சம்மதம் என்பது போல சம்பந்தரும் இதற்கு மறுதலிக்கவில்லை. ஆனால் அங்கு கடைசி நேரத்தில் வந்த குறித்த சர்ச்சை உறுப்பினர் ஒருபோதும் நான் பதவி விலகேன். வேண்டுமானால் நீங்கள் என்னைப் பதவியில் இருந்து விலக்குங்கள் என்று ஆவேசமாகச் சொல்லியிருக்கிறார்.

அதன் மூலம் அவர் பந்தை கூட்டமைப்பின் தலைவர் பக்கமும், தமிழரசுக் கட்சித் தலைவர் பக்கமும் திருப்பி அனுப்பி இருக்கிறார். உண்மையாகவே தமிழ் மக்களுக்காக இதயசுத்தியுடன் இந்த விடயத்தில் கூட்டமைப்புச் செயற்படுவதை மக்கள் உணர வேண்டுமாயின் , குறித்த பதவியைப் பிடுங்கத்தான் வேண்டும். ஏனெனில் குறித்த உறுப்பினர் இதற்கு முன்னரும் பல தடவை கள் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் இழிவுபடுத்தும் கருத்துக்களைப் பகிரங்கமாகக் கூறியவர். அப்படிப்பட்டவரின் கருத்துக்கள், கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற நிலையில் அது கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப் பாடாகவே மக்களால் கொள்ளப்படும் அபாய முண்டு. சரியான முடிவை கூட்டமைப்பு எடுக் குமா என்பதும் கேள்விக்குறியே.

அதைவிட குறித்த சர்ச்சை உறுப்பினரின் செம்பு கள், சம்பந்தரின் கூட்டத்தில் நடந்த விடயங்களை அப்படியே திருப்பிப் போட்டு, வேறுவிதமாக காட்டவும், கூட்டமைப்பு உறுப்பினர்களுக் கிடையே சிண்டு முடிந்துவிடும் வகையிலும் , கற்பனையில் கலந்த சோதியான கதைகளை வழக்கம்போல அடித்து விட்டிருக்கிறார்கள், விடுகிறார்கள். பாவம், ’சீட்’ கிடைக்கும் என்ற நப்பாசையில் நாக்கைத் தொங்கப்போட்டபடி இருக்கும் அந்தச் செம்புகள் இலவு காத்த கிளிகளான பின்னர், இப்போது எந்த உறுப்பினருக்காக வக்காலத்து வாங்குகிறார்களோ அதே உறுப்பினரைப் பற்றியும் சமூக வலைத்தளங்களில் வசைபாடத்தானே போகிறார்கள். வாழ்க்கை ஒரு வட்டம்.

- பட்சி

# வெடிபொருளுடன் இருவர் கைது

கொழும்பு, மே 31

வெல்லம்பிட்டிப் பகுதியில் துப்பாக்கி மற்றும் வெடிபொருட்களுடன் இருவர் வெல்லம்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு நேற்று சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கொலன்னாவையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள், கடந்த மாதம் 25 ஆம் திகதி கொலன்னாவைப் பகுதி வீடு ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை மற்றும் ஒருவரைக் கொலை செய்வதற்காக திட்டமிட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ப)

# பாடசாலைகளை ஆரம்பிக்க...

மற்றும் முதலுதவியை வழங்குவதற்கான அறை வசதிகள் உள்ளிட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு போதுமான நிதி அமைச்சிடம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர், “பாடசாலைகளில் கை கழுவுவதற்கு தேவையான வசதிகளைச் செய்வதற்கு மட்டும் 418 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. இந்த நேரத்தில், கல்வி அமைச்சிடம் 100 மில்லியன் ரூபா மட்டுமே இருப்பு உள்ளது.

இருப்பினும் இந்த வசதிகளுக்காக நிதி ஒதுக்கும் போது, அனுசரணையாளர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்களை ஈர்க்க வழி இல்லாத கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வசதிகளை மேற்கொள்ள பெற்றோரிடம் இருந்து நிதிப் பங்களிப்பு தேவையில்லை என்று அமைச்சர் பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்தாலும், பாடசாலைகளின் நலன் விரும்பிகள் அல்லது பழைய மாணவர்களிடம் கோரிக்கை விடுக்க அனுமதிக்கப்படும்.

இதேவேளை பாடசாலைகளுக்கு தேவையான நீர் வழங்கல் வசதிகளை எளிதாக்க அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களான பிரதேச செயலகங்கள், நகராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் பங்களிப்பையும் அமைச்சு கோரியுள்ளது.

உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கான வெப்பமானி, மாணவர்கள் கை கழுவுதற்கான ஏற்பாடுகள் மற்றும் திடீரென மாணவர்களுக்கு சுகவீனம் அல்லது உடல் உஷ்ணம் அதிகரித்தல் போன்றன ஏற்பட்டால் அந்த மாணவர்களுக்கான முதலுதவியை வழங்குவதற்கான கட்டிலுடன் கூடிய அறை வசதிகள் உள்ளிட்ட வசதிகளைச் செய்ய 680 மில்லியன் ரூபா செலவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. என்றார். (க)

# வெட்டுக்கிளிகளால் ஆபத்து

பணிப்பாளர் நாயகம் வீரக்கோன் இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு கருத்து வெளியிடுகையில்,

வட இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பாலைவன வெட்டுக்கிளிகள் தற்போது பாகிஸ்தானை நோக்கி படையெடுத்துள்ளன. பாலைவன வெட்டுக்கிளிகளின் தாக்கம் இலங்கையில் ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளது.

விவசாய அமைச்சு உள்ளிட்ட திணைக்களங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கின்றன. அச்சுறுத்தலை சமாளிக்க செயற்திட்டத்தை கொண்டு வர பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பூச்சியியல் வல்லுநர்கள், பயிர் வல்லுநர்கள் மற்றும் பிராந்திய வேளாண்மை இயக்குநர்கள் அடங்கிய பணிக்குழு விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. அவர்கள் தங்கள் வயல்களில் வெட்டுக்கிளிகளைக் கண்டால் அதிகாரிகளுக்குத் தெரிவிக்குமாறு அறிவுறுத்துகின்றனர்.

வெட்டுக்கிளி படையெடுப்பை கட்டுப்படுத்த தேவையான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இரசாயனங்களை அடையாளம் காணவும் பணிக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தேவை ஏற்பட்டால் அவர்கள் பாதுகாப்புப் படையினரின் உதவியையும் நாடுவார்கள், என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ஓ,5)

# ஐ.ம.சவில் இணையும் உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது

## சஜித் ஆணித்தரம்

கொழும்பு, மே 31

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் எந்தவொரு உறுப்பினருக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அதன் தலைமைத்துவத்துக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் போலியான பிரசாரங்களுக்கு யாரும் ஏமாற வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களது அங்கத்துவம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசேட அறிவித்தல் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களாவர். எனவே, நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படும் எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்க



ளுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தற்போது செயற்குழு தீர்மானங்களை எடுப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு ஏற்பவே செயற்படுகின்றமையால் எம்முடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது அர்த்தமற்றது. சட்ட ரீதியாக இதனை நிரூபிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். எம்முடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவர்களைப் பாதுகாப்பதற்காக தனிநபராக களமிறங்குவேன் என்று உறுதியளிக்கின்றேன் என்றார். (ப)



# போதைப்பொருள் குற்றம் ஒரே நாளில் 714 பேர் கைது

கொழும்பு, மே 31

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் போதைப்பொருள்களுடன் 714 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்களுள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு கைதுகள் இடம்பெற்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்போது, ஹெரோயினுடன் 218 பேரும், கஞ்சா வைத்திருந்தனரென 98 பேரும், சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடா வைத்திருந்தமை தொடர்பில் 320 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ஐஸ், மாவா, பாபுல் உள்ளிட்ட போதைப்பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 78 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## 220 கடற்படையினருக்கும் கொரோனாத் தொற்று இல்லை

கொழும்பு,மே 31

கொழும்பு, கோட்டை கபூர் கட்டடத் தொகுதியிலிருந்த 220 கடற்படையின ருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தில் இருந்த கடற் படை வீரர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்ப டுத்தப்பட்டதையடுத்து, அக்கட்டடத் தில் இருந்த சுமார் 220 பேர் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை நேற்று வெளியானது. அதில் எவருக் கும் கொரோனாத் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# கொரோனா வைரஸ் 20 அடி பாயுமாம்

### ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, மே 31

கொரோனா வைரஸ் தொற்று 6 அடி தூரம்தான் பரவும் என்று கூறப்பட்டு வந்த நிலையில் தொற்று 20 அடி வரை பாயும் என்று அமெரிக்காவின் கலி போர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அந்த ஆய்வில் கூறும்போது, “வருகிற குளிர்காலத் தில் இந்தியாவில் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. பேசு வதன் மூலம் தெறிக்கும் துளிகளின் மூலம் கொரோனா பரவுகிறது. புவிஈர்ப்பு சக்தியால் அவை நிலத்தில் உதிர்ந்து விடுகின்றன. சில துளிகள் காற்றில் நீடிக் கின்றன. இவற்றால் 20 அடி தூரம் வரை நோய்த் தொற்று பரவக்கூடும்“ என்று தெரிவித்துள்ளது. (ப)




## யாழிலிருந்து சென்றவர்கள் விபத்தில் சிக்கி படுகாயம்

### சிலாபத்தில் சம்பவம்

சிலாபம், மே 31

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தி ருந்து சென்ற ஐவர் படுகாயமடைந்துள் ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஐவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தவர்கள் எனவும் இவர் கள் சிகிச்சைக்காக சிலாபம் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியில் பயணிக்க முற்பட்டபோது, பின்பக்கமாக அதிவேகத்தில் பயணித்த டிப்பர் வண்டி எதிரே வந்த வான் மற்றும் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்தை ஏற்படுத் தும் காட்சி அருகில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது. விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி ஆகிய வற்றின் சாரதிகள் சிலாபம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிலாபம் போக்குவரத்துப் பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# விசேட அதிரடிப்படையின் பங்கு மிகவும் அளப்பரியது

### கமல் குணரத்ன பாராட்டு

கொழும்பு, மே 31

தீவிரவாதம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்க ளுக்கு எதிரான செயற்பாட்டில் விசேட அதிரடிப்படையின் பங்கு அளப்பரியதாகும் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குண ரத்ன தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படை தலை மையகத்திற்கான பயணத்தை



மேற்கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக முறியடித்ததன் மூலம் அவர் கள் தமது ஆளுமைகளை நிரூபித்துள்ளனர். இலங்கை பொலிஸாரின் விசேட படைப் பிரிவாக மிளிரும் விசேட அதிர டிப்படையினர், ஒரு சட்ட அமுலாக்க அதிகாரிகளாக மட்டு மல்லாமல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிராகப் போரா டுவதிலும் பயிற்சிபெற்ற ஒரு சக்தியாக உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## இலங்கை திரும்பியவர்களில் 505 பேருக்கு இதுவரை கொரோனா

கொழும்பு, மே 31



வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பி வந்த வர்களில் இதுவரை 505 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டுள்ள னர்.

இந்தத் தகவலை சுகாதார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப் பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குவைத் திலிருந்து நாடு திரும்பியவர்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர் களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடு களை இலங்கை அரசு முன்னெடுத்திருந்தது. அண்மைக் காலங்களில் அவ்வாறு பலர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு, தனிமைப் படுத்தல்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த னர். (ப)

# பல்கலை அனுமதிக்கான கால எல்லையை நீடிக்கவும்

### முன்னாள் எம்.பி. இம்ரான் மகரூப் கோரிக்கை

கொழும்பு, மே 31

பல்கலைக்கழக அனுமதிக் கான விண்ணப்பக் கால எல்லையை நீட்டிக்குமாறு, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கல்வி அமைச் சின் முன்னாள் கண்கா ணிப்பு உறுப்பினருமாகிய இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், உயர் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ் வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:

‘2019 க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்று, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்க ளின் விண்ணப்பப் படிவத்தை, பாடசாலை ஆரம்பித்து இரு வாரங்களின் பின்னர் சமர்ப் பித்தல் போதுமானதென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.’எனினும், தற்போது ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் குறித்த



விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அனுப்பவேண்டுமென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவொரு முரணான விடயமா கும். இந்த முரண்பாட்டால் மாண வர்களின் எதிர்காலம் பாதிக்கப்ப டக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்த அரசாங்கத்தின் கல்வி சார்ந்த நிலையற்ற ஒரு கொள்கையை இது சுட்டிக்காட்டுகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மாணவர்களுக்கு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ய முடி யாதநிலை ஏற்படலாம்.

பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படப் போகின்றது என்று தெரியாத ஒரு சூழ்நிலை யில் அதிபர், ஆசிரியர்களுடைய ஆலோச னைகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை மாணவர்களுக்கு ஏற்படலாம். இவற்றைக் கருத்தில்கொண்டு, பல்கலைக்க ழக அனுமதிக்கான கால எல்லையை நீடிக் குமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள் ளது . (ஐ-40)

# நல்லாட்சி அரசை குறைகூறாதீர்!

## முன்னாள் எம்.பி.ஹர்ஷடிசில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே 31



கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றால் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து எதிர்த்தரப்பினர் மீதோ, முன்னைய அரசாங்கத்தின் மீதோ குறை சொல்வது முறையற்ற செயற்பாடாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்தால் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்க முடியவில்லை. கொரோனா வைரஸ் பரவலை இதற்குக் காரணமாகக் காட்டினாலும் , வைரஸ் பரவலுக்கு முன்னர் இருந்த அரசாங்கம் எவ்வித பயன்தரும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வில்லை. இதே வேளை பசில் ராஜபக்ச ஊடக சந்திப்பொன்றின் போது தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக தனியார் துறை உரிமையாளர்களுக்கு போதிய நிதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனால் தனியார் துறை ஊழியர்கள் நிறுவனங்கள் நிதியைப் பெற்றுக்கொண்டு தங்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று தவறான எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவ்வாறு யாருக்குமே நிதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஏன் பசில் இவ்வாறு போலிப் பிரச்சாரம் செய்து மக்களை ஏமாற்றி வருகின்றார். தற்போதைய அரசாங்கம் ஆட்சியை பொறுப் பேற்றபோது நெற்களஞ்சியசாலையில் ஒரு நெல்மணிகூட களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார். இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும்.

நாங்கள் 42 மெட்ரிக் டொன் நெல்லை களஞ்சியப்படுத்தியிருந்தோம். அது தொடர்பில் ஆதாரங்களும்' எம்மிடம் இருக்கின்றன. அதேவேளை நுகர்வோர் அதிகாரசபையிடம் அறிந்து கொள்ளமுடியும்.

இந்த நெல்லுக்கு என்ன நடந்தது, அது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அவர்கள் நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு உரியமுறையில் முகாமைத்துவம் செய்யமுடியவில்லை என்றால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் . இதனைவிடுத்து கடந்த அரசாங்கத்தையும் , எதிர்க்கட்சியையும் குறைகூறி வருவது நியாயமற்ற செயற்பாடாகும்- என்றார். (ப)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 31

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொஹுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஸ்.டீ.பீ.ஜயசிங்க மாவத்தையில் நேற்று முன்தினம் பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைதுசெய்யப்பட்டார். பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 154 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஹுவலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ)

## 63, 935 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, மே 31

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நாட்டில் இதுவரை 63 ஆயிரத்து 935 வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாத்திரம் ஆயிரத்து 727 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## தனக்குத் தானே தீ மூட்டி தவறான முடிவெடுத்த முதியவர் சிகிச்சையில்

திருகோணமலை, மே 31

தனக்குத் தானே தீ மூட்டி தவறான முடிவெடுக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் திருகோணமலை இலிங்கநகர் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதே இடத்தை மாரிமுத்து வேலாயுதப்பிள்ளை (வயது -60) என்ற முதியவரே தீக்காயங்களுக்கு உள்ளானார்.

குடும்பத்தகராறு காரணமாக கணவர் ஒரு இடத்திலும் மனைவி அவரது உறவினர் வீட்டிலும் வாழ்ந்து வந்த நிலையில் மனைவியைத் தாக்க முயற்சித்து அது முடியாமல் போகவே கோபம் கொண்ட இவர், மண்ணெண்ணை ஊற்றி தவறான முடிவெடுக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வழிகாட்டலை தயாரிக்குமாறு கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, மே 31

இலங்கையில் கொரோனாவினால் தடைப்பட்டிருந்த கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்ததன் பின்னர் பின்பற்ற வேண்டிய தகுந்த வழிகாட்டலைத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது. இது தொடர்பிலான ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கை மாகாண மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் M.H.M. சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, சுகாதார நிலைமை மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய குறித்த வழிகாட்டலை தயாரிப்பது அவசியமாகும். மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது, உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் M.H.M. சித்ரானந்த குறிப்பிட்டுள்ளார். (ப)

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, மே 31

ஹம்பலாந்தோட்டை பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு இடம் பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்காகவே குறித்த நபர் கொலைசெய்யப்பட்டுள்ளார். (எ)

## தொண்டமானின் இறுதிக் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா?

மன்னார், மே 31

காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதி வேண்டுகோளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையக தமிழ் மக்களுக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர். அவரது இறுதிக் கடமைகளை நிறைவேற்றியுள்ள இத்தருணத்தில் மலையக மக்களின் வாழ்வாதார மேம்படுத்தல் அடிப்படையில் ஆறுமுகன் தொண்டமான், இறுதிச் சந்திப்பில் அரச தலைவர்களிடம் வைத்த முக்கிய வேண்டுகோள் மலையக தமிழ் மக்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரம். இதனை அரசு உடனடியாக வழங்குவதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே இன்றைய அரசு காலஞ்சென்ற ஆறுமுகன் தொண்டமானுக்கு செய்கின்ற மரியாதையாகும்- என்றுள்ளது. (க-60)

## குவைத்திலிருந்து திரும்பியோரின் தொடர்பால் சிப்பாய்க்குத் தொற்று

கொழும்பு, மே 31

குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமையே இராணுவச்சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்படக் காரணம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றியதுடன், அங்கிருந்து வந்தவர்களுக்கு இந்த இராணுவச் சிப்பாய் உதவிகளை மேற்கொண்டுள்ளார். அதன்பின்னர் இராணுவச் சிப்பாய் கடந்த 26 ஆம் திகதி விடுமுறையில் ஹொரணையில் உள்ள வீட்டிற்கு சென்றுள்ளார்.

தற்போது கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஹொரன நகரில் 4 வர்த்தக நிலையங்களில் பணியாற்றிய 26 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ)

# ஊரடங்கு முழுமையாக நீக்கப்படும் சாத்தியம்

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கை முழுமையாக நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதும் இன்று ஊரடங்கு அமுல்படுத்தப் பட்டுள்ளது.

நேற்று இரவு 10 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு நாளை திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிவரை மாத்திரமே அமுலில் இருக்கும். அதேபோன்று, எதிர்வரும் ஜூன் 04 மற்றும் பொசன் நோன்மதி தினமான 05 ஆம் திகதிகளிலும் மீண்டும் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இதற்கமைவாக ஜூன் 03 ஆம் திகதி இரவு 10.00 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்கு 06 ஆம் திகதி அதிகாலை 4.00 மணிவரை அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்திருக்கிறது.

நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 03 ஆம் திகதி புதன்கிழமை வரை வழமைபோன்று தினமும் இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 04 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படும். இன்று நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதனால் அனைத்து மாவட்டங்களிலும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய போக்குவரத்து நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கை முழுமையாக நீக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. வரும் நாள்களில் சமூகத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாமல் இருந்தால் இந்த முடிவை நடைமுறைப்படுத்த அரச உயர்பீடம் எண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி எதிர்வரும் பொசன் தினத்திற்குப் பின்னர் பெரும்பாலும் ஊரடங்கு முழுமையாகத் தளர்த்தப்படலாம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)



# வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையில் சிரமதானம்

மன்னார், மே 31

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை, வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக் கழகத்தினரால் இன்று துப்புரவு செய்யப்பட்டது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பாடசாலை மூடப்பட்டிருந்தது.

தற்போது சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது. அதற்குத் தயார்ப்படுத்தும் முகமாக வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை துப்புரவு செய்யப்பட்டது.(க-213)

# வீதிகளைச் சீரமைப்பதற்கு சிறப்புக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் கிராமத்திலுள்ள அழகரத்தினம் வீதி, வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதான வீதி போன்ற வீதிகளைச் சீரமைப்பதற்கான விசேட சந்திப்பும் கள ஆய்வும் இடம்பெற்றுள்ளது.

இத் திட்டத்துக்கான பணிப்பாளர் தலைமையில் வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர்கள் மற்றும் மாகா நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு மக்களைச் சந்தித்து அண்மையில் கலந்துரையாடினர்.

இதன்போது அபிவிருத்தியின்போது விசேடமாகக் கவனம் செலுத்தவேண்டிய வேலைகள் பற்றி அவ் இடங்களைப் பார்வையிடும் நோக்குடன் அவ் இடங்களுக்குச் சென்று விவரங்கள் சேகரிக்கப்பட்டது. வட்டக்கச்சி புழுதியாறு குறுக்கறுத்துச் செல்லும் நாவலடிப் பகுதியை விசேட ஆய்வுக்கு உட்படுத்தி திட்டத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பம்

கொழும்பு, மே 31

நாட்டில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது;

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள். என்று வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ப)

வற்றாப்பளையில்

# தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு 30 பேருக்கு மட்டுமே அனுமதி

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வுக்காக தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர ஏனையவர்கள் பங்குபற்ற அனுமதியில்லை.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆண்டுப் பொங்கல் நிகழ்வை முன்னிட்டு நடைபெறும் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது. அம்மனின் புனித கைங்கரியமான தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக 30 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக சுகாதார விதிகளுக்கு அமைவாக பொங்கல் நிகழ்வுக்கான புனித கருமத்தை ஆற்றவேண்டியுள்ளது.

எனவே இந்தப் புனிதயாத்திரையில் அனுமதி அட்டை வழங்கப்பட்ட 30 பேரைத் தவிர ஏனைய எவரும் கலந்துகொள்ள அனுமதி இல்லை. தீர்த்தக்குடம் திரும்பி வரும்போது தேங்காய் உடைப்பவர்கள் ஒரு தேங்காயை உடைத்து வழிபாடு செய்யலாம். இதன்போது தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றனர். (க-19)



# சுவாசப்பை, நுரையீரல் பாதிப்பே கருஞ்சிறுத்தை இறக்க காரணம்

கொழும்பு, மே 31

ஸ்ரீலங்காவில் அரிய வகை உயிரினமாகக் கருதப்படும் கரும்புலி ஒன்று அண்மையில் உயிருடன் பிடிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தது. நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்த கருஞ்சிறுத்தையின் இறப்புக்கு சரியான காரணம் தற்போது வெளியாகி உள்ளது. கருஞ்சிறுத்தையின் நுரையீரல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதன் சுவாசப்பை மற்றும் நாளங்களுக்கிடையிலான உறுப்புகளும் பாதிக்கப்பட்டமையே இறப்புக்கான காரணமென பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. கடந்த 27 ஆம் திகதி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் பொறியிலிருந்து மீட்கப்பட்ட கருஞ்சிறுத்தைக்கு உடவளவவில் சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடை வைத்தியர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் கடந்த சில நாள்களாக கருஞ்சிறுத்தைக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அது உயிரிழந்தது. கருஞ்சிறுத்தையின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை நடத்தும் பொறுப்பு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கால்நடை வைத்தியபீடத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)



# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடந்தப்பட்டதற்கு காரணம் என்ன?

## திடுக்கிடும் தகவல்களுடன் காணொலி

கொழும்பு,மே 31

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் கடந்த வெள்ளிக்கிழமை சாட்சியம் அளித்தார். தாக்குதல் நடத்துவதற்கு என்ன காரணம் என்பதை உள்ளடக்கிய காணொலி ஒன்றையும் அவர் ஆணைக்குழுவில் ஒப்படைத்தார்.

சஹ்ரான் ஹாசீம் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முந்தைய நாள் கல்கிஸ்ஸ பகுதியில் பதிவுசெய்த காணொலி ஒன்றில் தாக்குதலுக்கான காரணங்களைத் தெரியப்படுத்தியுள்ளார். கடந்த 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஜமில் மொஹமட் என்பவரிடம் பயங்கரவாத ஒழிப்பு விசாரணைப் பிரிவு விசாரணை நடத்தி அது குறித்து அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. எனினும் 2019 ஏப்ரல் 8 ஆம் திகதி பூஜித ஜயசுந்தர கையெழுத்திட்டு அனுப்பிய ஆவணத்தில் ஜமீல் மொஹமட் என்பவர் ஒரு தீவிரவாத வெறியர் என்பது தொடர்பில் எந்தத் தகவலும் பதிவாகவில்லை. ஜமீல் மொஹமட்டின் மனைவியை விசாரித்தபோது, தாக்குதல் நடந்த தினத்தன்று காலையில் குண்டுதாரி தனது மொபைல் போனில் வாட்ஸ் அப்பிற்கு ஒரு டேப்பை அனுப்பியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. தாக்குதலுக்கு முந்தைய நாளில், சஹ்ரான் ஹாசீம் நீண்ட உடையை அணிந்து தரையில் விழுந்தவாறு பதிவு செய்த வீடியோக்கள் பல வற்றை இதுவரை ஊடகங்கள் ஒளிபரப்பாத காணொலிகள் கிடைக்கப்பட்டுள்ளன.

அதில் தாக்குதல் நடத்த உயிர்த்த ஞாயிறு தினத்தை தெரிவு செய்தமைக்கான நான்கு காரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட செயல்களை நேசிக்கவும், தடைசெய்யப்பட்ட செயல்களை நிராகரிப்பதற்கும்.

முன்னாள் ஐ.எஸ் தலைவர் உருவாக்கிய இஸ்லாமிய அரசின் மீது தாக்குதல் நடத்தி அங்கிருந்த முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்கு பழிவாக்குதல். நியூசிலாந்தில் ஒரு பள்ளியில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை கொலை செய்தமை, ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள முஸ்லிம் மக்களைக் கொல்வதற்கு காரணமானவர்கள் இலங்கையில் சுற்றுலா மேற்கொண்டமை போன்ற காரணங்களால் இலங்கையில் உள்ள தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் தாக்கப்பட்டதாக சஹ்ரானின் வீடியோவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த தற்கொலைக் குண்டு தாக்குதல்களை இலங்கையில் நடத்த காரணமானவைகள் குறித்தும் சஹ்ரான் தனது வீடியோ பதிவில் கூறியுள்ளதாக அவர் சாட்சியம் அளித்தார்.

அல்லாஹ் தெய்வத்தை ஏசுவது மற்றும் குறைத்து மதிப்பிடுதல், குளியாப்பிட்டியில் பன்றி உருவத்தில் அல்லாஹ்வை சித்தரித்தது, அல்லாஹ் மறுபிறவி எடுத்தான் என்று ஞானசாரதேரர் கூறியமை, முகமது நபிக்கு எதிராக குற்றம் சுமத்தல், குரானைக் கிழித்து எரித்தமை, மஸ்ஜித் பள்ளிவாசல்களை இடித்தல், முஸ்லிம்களின் வீடுகளுக்கு தீ வைத்து பொருளாதாரத்தை அழித்தமை சர்வதேச சிலுவைப் போரில் இலங்கையின் பங்கேற்பு, அல்லாஹ்வின் சட்டத்தின்படி இஸ்லாத்தை தழுவ மறுக்கும் நபர்களைக் கண்ட இடத்தில் கொல்வது என்பனவே அந்த காரணிகள்.

மேலும் இந்தத் தாக்குதல் முஸ்லிம்களின் பாதுகாப்புக்காகவும், அல்லாஹ்வை கௌரவபடுத்துவதற்காகவுமே நடத்தப்படுகிறது என்றும் அந்த காணொலியில் கூறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் ஆணைக்குழு வீடியோ பதிவுசெய்யப்பட்ட இடம் குறித்து கவனம் செலுத்தியது. இந்தக் காணொலித் தாக்குதல் நடத்த முன்னர் அதாவது ஏப்ரல் 20 ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரையான நேரத்தில் கல்கிஸ்சையில் உள்ள கட்டடத்தில் பதிவுசெய்யப்பட்டதாகவும் சாட்சியாளர் கூறினார். பின்னர் சஹ்ரான் ஹசீமிடம் இருந்த துப்பாக்கி குறித்து ஆணைக்குழு விசாரித்தது. அது ரி56 ரக துப்பாக்கி எனவும், 2017 ஆம் ஆண்டு முதல் பயிற்சிகளுக்காக அதனை சஹ்ரான் பாவித்துள்ளதாகவும் ஆனால் அந்த ஆயுதத்தை சரியாக தம்மால் அடையாளம் காண முடியவில்லை எனவும் சாட்சியாளர் ஆணைக்குழுவில் கூறினார். (ப)

# துப்பாக்கி பிரயோகம்; ஒருவர் கைது

கொழும்பு, மே 31

துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவை சொய்சாபுர பிரதேசத்திலுள்ள உணவு விடுதியொன்றுக்கு, காரில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார். பாணந்துறை எலுவில பிரதேசத்தில் வைத்து இவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டார். (ஐ)

# இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா, மே 31

வவுனியா கருவேப்பங்குளம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டது. குறித்த இளைஞனை நீண்ட நேரம் காணாதநிலையில் அவரது பெற்றோர் தேடியுள்ளனர். இளைஞன் வீட்டின் முன்பாக உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதை அவதானித்தனர். உடனடியாக அவரை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஏற்கனவே அவர் சாவடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த சீவரத்தினம் நிலான் (வயது 18) என்ற நபரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-110)

# பழுதடைந்த பாண் விற்பனை

வவுனியா, மே 31



வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் பழுதடைந்த பாண் விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறித்த வர்த்தகருடன் நுகர்வோர் ஒருவர் முரண்பட்டுள்ளார்.

இன்று கொண்டுவரப்பட்ட புதிய பாண் உள்ளதா என வர்த்தகரிடம் நுகர்வோர் கேட்டபோது அவரும் 'ஆம்' எனத் தெரிவித்து தன்வசம் வைத்திருந்த பாணை விற்பனை செய்துள்ளார்.

அதனைப் பெற்றுக்கொண்ட நுகர்வோர் வீட்டுக்குக் கொண்டு சென்று பார்த்தபோது அது பழுதடைந்திருந்தது

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்துக்கு மீண்டும் வந்த அவர் வர்த்தகரிடம் பாண் பழுதடைந்துள்ளது தொடர்பாக கேட்டுள்ளார். வர்த்தக நிலையத்துக்கு பாண் வழங்கும் வெதுப்பகத்தினருடன் நுகர்வோர் தொடர்பு கொண்டு கேட்டபோது இன்றைய தினம் வர்த்தக நிலையங்களுக்கு பாண் விநியோகிக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகரிடம் குறித்த விடயம் தொடர்பாக நுகர்வோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-110)

# வழிகாட்டுதல்களை பின்பற்றாது அமைச்சர்களின் இறுதிச் சடங்கு

## ஆபத்து என்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, மே 31

சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளபோதும் முக்கிய அமைச்சர்களின் இறுதிச் சடங்குகள் இடம்பெறும் பகுதிகளில் வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறுவதால் ஆபத்துக்கள் உருவாகலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இறுதிச் சடங்கில் பெருமளவு மக்கள் கலந்துகொள்வதால் நாடு முழுவதுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து பிராந்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது நாட்டில் கடற்படையினருக்கும் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு அழைத்து வரப்படுபவர்கள் மத்தியிலும் மாத்திரமே கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்படுவதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. எனினும் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்காவிட்டால் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் கட்ட ஆபத்து உருவாகலாம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. இதே வேளை தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறிய மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் குறித்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலையையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளது. (ப)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 31.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.